**அனுப்புனர்,**
திருமதி. வ.பிரவீணா தேவி, B.E.,MSc.,M.Phil.,
மாவட்ட சமூகநல அலுவலா்,
நீலகிரி மாவட்டம்.

**பெறுநர்,**
சமூக நல ஆணையர்,
சமூக நல ஆணையரகம்,
லேடி வெல்லிங்டன் கல்லூரி வளாகம்,
காமராஜர் சாலை,
சென்னை 600005.

**செ.மு.ந.க.எண். 09/அ2/2024** **நாள்: 15.03.2024**

அம்மையீர்,

பொருள்: சமூக நலம்- மாட்ட சமூகநல அலுவலகம்- நீலகிரி மாவட்டம் - பணியிடங்களில் பாலியல் வன்கொடுமையிலிருந்து பெண்களை பாதுகாக்கும் (தடுப்பு, தடை மற்றும் தீர்வு) சட்டம், 2013- புகார் மனுக்களை பெறுவதற்கு தாலுகா, கோட்டம், வட்டாரம், ஒன்றியம் மற்றும் நகராட்சி அளவில் மைய முனை அலுவலர்கள்(Nodal Officers) நியமித்தது- தொடர்பாக.

பார்வை:
1. பணியிடத்து பாலியல் வன்கொடுமையிலிருந்து பெண்களை பாதுகாக்கும் (தடுப்பு, தடை மற்றும் தீர்வு) சட்டம், 2013.
2. சமூக நல ஆணையர், சென்னை அவர்களின் நே.மு.ந.க.எண்.58645/ WW2(3)/2013, நாள் 29.10.2019.
3. சமூக நல ஆணையர், சென்னை அவர்களின் ந.க.எண். 3325/ SHEW/2024, நாள்: 07.03.2024.
4. நீலகிரி மாவட்ட ஆட்சித்தலைவர் அவர்களின் செயல்முறை நக.எண்9/அ2/2024, நாள்: 15/03/2024

------

பார்வையில் கானும் பணியிடத்து பாலியல் வன்கொடுமையிலிருந்து பெண்களை பாதுகாக்கும் சட்டம், 2013-ன்படி நீலகிரி மாவட்டத்தில் வருவாய் கோட்டம், வட்டம், ஊராட்சி ஒன்றியம், மற்றும் நகராட்சி அளவில் புகார் மனுக்களை பெறுவதற்கு ஏதுவாக பார்வை.4ல் காணும் மாவட்ட ஆட்சித்தலைவர், நீலகிரி மாவட்டம் அவர்களால், மைய முனை அலுவலர்களை(Nodal Officers) நியமிக்கப்பட்டுள்ளளார்கள் என்ற விபரத்தினை பணிவுடன் தெரிவித்துக்கொள்கிறேன். மேலும் மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்களின் செயல்முறை ஆணையின் நகல் இத்துடன் இணைத்துள்ளேன் என்பதனையும் பணிவுடன் தெரிவித்துக்கொள்கிறேன்.

15/3/24

மாவட்ட சமூகநல அலுவலர்
நீலகிரி மாவட்டம்

15/3/24

## நீலகிரி மாவட்ட ஆட்சியர் அவர்களின் செயல்முறை ஆணை
## முன்னிலை: திருமதி. மு. அருணா, இ.ஆ.ப.,

**செ.மு.ந.க.எண். 09 /அ2/2024** **நாள்: 14.03.2024**

பொருள்: சமூக நலன் (ம) மகளிர் உரிமைத்துறை நீலகிரி மாவட்டம் - பணியிடங்களில் பாலியல் வன்கொடுமையிலிருந்து பெண்களை பாதுகாக்கும் (தடுப்பு, தடை மற்றும் தீர்வு) சட்டம், 2013- புகார் மனுக்களை பெறுவதற்கு தாலுகா, கோட்டம், வட்டாரம், ஒன்றியம் மற்றும் நகராட்சி அளவில் மைய முனை அலுவலர்கள்(Nodal Officers) நியமித்து ஆணை வழங்கல்- தொடர்பாக.

பார்வை:
1. பணியிடத்து பாலியல் வன்கொடுமையிலிருந்து பெண்களை பாதுகாக்கும் (தடுப்பு, தடை மற்றும் தீர்வு) சட்டம், 2013.
2. சமூக நல ஆணையர், சென்னை அவர்களின் நே.மு.ந.க.எண்.58645/ WW2(3)/2013, நாள் 29.10.2019.
3. சமூக நல ஆணையர், சென்னை அவர்களின் ந.க.எண். 3325/SHEW/2024, நாள்: 07.03.2024.

ஆணை,

பார்வை 1ல் தெரிவித்துள்ள படி, நீலகிரி மாவட்டத்தில் 10 நபர்களுக்கு கீழ் பணிபுரியும் அனைத்து பணியிடங்களிலும் பாலியல் வன்கொடுமையிலிருந்து பெண்களை பாதுகாக்கும் பொருட்டு, மாவட்ட அளவில் உள்ளுர் குழு அமைக்கப்பட்டுள்ளது. அதனைத் தொடர்ந்து புகார் மனுக்களை பெறுவதற்கு தாலுகா அளவில் வட்டாட்சியர்களையும், கோட்டம் அளவில் கோட்டாட்சியர்களையும், ஊராட்சி ஒன்றிய அளவில் வட்டார வளர்ச்சி அலுவலர்களையும், நகராட்சி அளவில் நகராட்சி ஆணையர்களையும் மைய முனை அலுவலர்களாக (Nodal Officers) கீழ்கண்டவாறு நியமனம் செய்து ஆணை வழங்கப்படுகிறது.

| வ.எண் | பொறுப்பு பகுதி | பொறுப்பு அலுவலர் |
|---|---|---|
| 1. | உதகமண்டலம் கோட்டம் | கோட்டாட்சியர், உதகமண்டலம் |
| 2. | குன்னூர் கோட்டம் | கோட்டாட்சியர், குன்னூர் |
| 3. | கூடலூர் கோட்டம் | கோட்டாட்சியர்,கூடலூர் |
| 4. | உதகமண்டலம் நகராட்சி | நகராட்சி ஆணையர், உதகமண்டலம் |
| 5. | குன்னூர் நகராட்சி | நகராட்சி ஆணையர் குன்னூர் |
| 6. | கூடலூர் நகராட்சி | நகராட்சி ஆணையர் கூடலூர் |
| 7. | நெல்லியாளம் நகராட்சி | நகராட்சி ஆணையர் நெல்லியாளம் |

| | | |
|---|---|---|
| 8. | ஊராட்சி ஒன்றியம், உதகமண்டலம் | வட்டார வளர்ச்சி அலுவலர், உதகமண்டலம் |
| 9. | ஊராட்சி ஒன்றியம், குன்னூர் | வட்டார வளர்ச்சி அலுவலர், குன்னூர் |
| 10. | ஊராட்சி ஒன்றியம், கூடலூர் | வட்டார வளர்ச்சி அலுவலர், கூடலூர் |
| 11. | ஊராட்சி ஒன்றியம், கோத்தகிரி | வட்டார வளர்ச்சி அலுவலர், கோத்தகிரி |
| 12. | உதகமண்டலம் வட்டம் | வட்டாட்சியர் உதகமண்டலம் |
| 13. | குன்னூர் வட்டம் | வட்டாட்சியர் குன்னூர் |
| 14. | குந்தா வட்டம் | வட்டாட்சியர் குந்தா |
| 15. | கோத்தகிரி வட்டம் | வட்டாட்சியர் கோத்தகிரி |
| 16. | கூடலூர் வட்டம் | வட்டாட்சியர் கூடலூர் |
| 17. | பந்தலூர் வட்டம் | வட்டாட்சியர் பந்தலூர் |

15/3/24

**மாவட்ட ஆட்சித் தலைவர்**
**நீலகிரி மாவட்டம்**

பெறுநர்:

சம்பந்தபட்ட அலுவலர்கள்

நகல்:

சமூக நல ஆணையர்,
சமூக நல ஆணையரகம்,
லேடி வெல்லிங்டன் கல்லூரி வளாகம்,
காமராஜர் சாலை
சென்னை 600005.